**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 26/2022 |
| Name | : | Janagarajan |
| P.W. | : | 7 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 23.07.2026

**எதிரிகள் 1 முதல் 7 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொமரலிங்கம் காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளர் ரவி மற்றும் புலன் விசாரணை அதிகாரி ராஜகண்ணன் ஆகியோரின் கையொப்பம் எனக்கு நன்கு பரிச்சயம் என்பதால் ஆவணங்களின் அடிப்படையில் நான் கூடுதல் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 14.12.2021ம் தேதி உதவி ஆய்வாளர் ரவி நிலைய அலுவலில் இருந்த போது உடுமலை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இண்டிமேசன் பேரில் அங்கு சென்று சிகிச்சையில் இருந்த ஜெதீஸ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொமரலிங்கம் காவல் நிலைய குற்ற எண்.507/2021 இதச பிரிவுகள் 147, 148, 447, 427, 294(பி), 323, 324, 506(2) மற்றும் sec 4 of TNPHW act ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**. அசல் புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை இணைத்து நீதிமன்றத்திற்கும், அதன் ஒரு நகலை புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் ராஜகண்ணன் அவர்கள் வசம் ஒப்படைத்துள்ளார். இவ்வழக்குக் கோப்பை விசாரணைக்கு

எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் அவர்கள் 14.12.2021ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரத்தனராஜ் மற்றும் சுப்பிரமணி ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும் மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே தேதியில் காலை 09.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் சுமார் 2 அடி நீளமுள்ள குச்சிகள் – 2, கைக்கு அடக்கமான கற்கள் –3, சுமார் 1 ½ அடி நீளமுள்ள அரிவாள் –1, சுமார் 1 ¾ அடியுடன் கூடிய மரக்கைப்பிடி கொண்ட மண் வெட்டி – 1, TN 78 Q 0994 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் உடைந்த நிலையில் உள்ள முகப்பு விளக்கின் பாகங்கள் –2 ஆகியவற்றை கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றியுள்ளார். **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சுமார் 2 அடி நீளமுள்ள 2 குச்சிகள் அ.சா.பொ.4 ஆகவும், TN 78 Q 0994 என்ற எண் கொண்ட இருசக்கர வாகனத்தின் உடைந்த நிலையில் உள்ள முகப்பு விளக்கின் பாகங்கள் –2 அ.சா.பொ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் எதிரிகளை தேடி வந்த போது 14.12.2021ம் தேதி மேட்டுக்காடு பஸ் ஸ்டாப்பிலிருந்த எதிரி மணிக்குமாரை பிடித்து விசாரிக்க எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே இடத்தில் வைத்து 12.30 மணிக்கு சாட்சிகள் பழனிச்சாமி மற்றும் திருமுருகன் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தில் பதிவு செய்துள்ளார். **ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள ஆய்வாளர் அவர்களின் கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கின் 1 முதல் 7 வரையான எதிரிகளை 14.12.2021ம் தேதி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு ஆஜர்படுத்தியுள்ளார். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட வழக்குச் சொத்தை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். **படிவம் 91 அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இவ்வழக்கில் காயம்பட்ட வாதிகளுக்கு சிகிச்சை அளித்த உடுமலை அரசு மருத்துவனை மருத்துவர் சிவபிரபு அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுன் கூடிய காயச் சான்று பெற்றுள்ளார். **ஜெகதீஸ்குமார் என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ.11 ஆகவும், கிருஷ்ணவேணி என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ.12 ஆகவும், கௌசல்யா என்பவரின் காயச்சான்று அ.சா.ஆ.13 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவி ஆய்வாளரை விசரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

இவ்வழக்கில் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது கடந்த **07.01.2022** ம் தேதி இதச பிரிவுகள் 147, 148, 447, 427, 294(பி), 323, 324, 506(2) மற்றும் Sec 4 of TNPHW act ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.1 கொடுத்த தவறான புகாரை மீது முறையாக விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சாட்சிகளை சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் வைத்து விசாரிக்காமல் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் வழக்கு பொருட்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் சரிவர புலன் விசாரணை செய்யாமல் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.07.23 15:45:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்